நாள் - 25.11.2022

**C.C. No**.133/2021

**ம.சா.1-நடராஜன் , த/பெ. பழனிசாமி.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 25**th day of November** 2022.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான் கடந்த 15 வருடங்களாக பல்லடசம் சிட்பன்ஸ் நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். அந்நிறுவனமானது 2004 ம் ஆண்டு ஆரம்பிக்கபட்டதாகும். 2011 ம் வருடம் முதல் 2013 ம் வருடம் வரையிலான காலத்தில் மேற்படி நிறுவனத்தில் நான் பங்குதாரர்கள் இருந்தார்கள். அவர்கள் பொன்னம்மாள், சின்ன சுப்பையகவுண்டர். ஈஸ்வரமூர்த்தி, சித்ரா ஆகியோர் இருந்தார்கள். சமீபத்தில் பிரதீப் என்பரும் ஒரு பங்குதாரதாக சேர்ந்துள்ளார்.

2. எதிரியை 20 வருடங்களாக எனக்கு தெரியும். எதிரி ஈரோட்டில் டிரான்போர்ட் வைத்து நடத்தி வருகிறார். நான் முன்னர் டெக்டைல்சில் வேலை பார்த்தபோது எதிரியினுடைய வாகனத்தில் சென்று வருவதன் மூலம் எதிரி எனக்கு பழக்கமாவார். சீட்டு தொகை வசூல் செய்ய எத்தனை முறை எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளேன் என்றால் நான் எதிரியின் வீட்டிற்கு செல்லவில்லை. எதிரி பல்லடம் சின்பைன்ஸ் நிறுவனத்தில் சீட்டு போட்டிருந்தார் என்றால் சரியல்ல.

3. பொன்னம்மாளுக்கும் எதிரிக்கும் இடையேயான வரவு செலவு எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நேரடியாக தெரியும். என் முன்னிலையில் தான் பணம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். பல்லடம் சின்பைனடில் நான் ஊழியராக இருப்பதால் பொன்னமாளுக்கு ஆதராவாக என் முன்னிலையில் பணம் கொடுக்கப்பட்டதாக பொய்யாக சாட்சயம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. இவ்வழக்கில் ம.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் பிரதீப் மற்றும் சுப்ரமணியம் ஆகியோர் சாட்சிகளான கையொப்பம் செய்துள்ளார்கள். கடனுறுதி சீட்டினை எதிரிதான் எழுதி எடுத்து வந்தார். கடனுறுதி சீட்டில் எழுதியதும் சாட்சியமாக பிரதீப் கையொப்பம் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் முதல் வரிசையில் வருடம் எழுதும் இடத்தில் 19 என்று அச்சிடப்பட்ட என்ற எண்ணிற்கு 20 என்று பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் எதிரி தான் எழுதி கொண்டுவந்தார்.

5. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடனுறுதி சீட்டு மற்றும் காசோலைகள் சீட்டிற்காக பெறபட்டவை என்றால் சரியல்ல. நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். பொன்னம்மாள் எதுவும் படிக்கவில்லை. ம.சா.ஆ.8 பொது அதிகார பத்திரத்தில் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்டுள்ள வாசகங்கள் அனைத்தும பொன்னமாளுக்கு மொழிபெயர்த்து வாசித்து காண்பிக்கப்பட்ட கைரேகை மற்றும் குறிப்பு உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது.

6. நான் அளித்த தகவலின் பெயரில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதனை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். ம.சாஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் காசோலை எண் 000204 என்ற காசோலைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் காசோலை எண் 000240 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.

7. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் காசோலை தொகை ரூ.2,50,000/- என்று குறிப்பிடபட்டுள்ளது தவறாகும்.பிரமாண வாக்குமூலமானது தவறு என்றால் சரியலல. வழக்கறிஞர் அறிவிப்பிற்குரிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொன்னம்மாள் மேற்படி சீட்டு நிறுவனத்தில் பங்குதாரராக இருந்தார். தற்போது விலகிவிட்டார். மேலும் விவசாயம் செய்து வருகிறார். கடன் கொடுத்த விபரங்களை பொன்னமாள் வருமானவரி கணக்கில் காண்பித்துள்ளாரா என்றால் சரிதான். அக்கணக்கை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும்.

8. வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி எதற்காக கடன் பெற்றார் என்ற குறிப்பிடபட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பொன்னம்மாள் எவ்வளவு தொகையை எவ்வாறு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ரூ.2,50,000/ கொடுத்தார். பொன்னமாளுக்கு தற்போது 82 வயதாகிறது. பொன்னம்மாள் எதிரிக்கு ரூ.2,50,000/- கொடுக்கவில்லை என்றாலும் எதிரி பெறவில்லை என்றாலும் சரியல்ல. பொன்னம்மாள் தற்போது நடந்து கொண்டுதான் இருக்கிறார்.

9. பொதுஅதிகார பத்திரத்தில் வயது மூப்பின் காரணமாக என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரியல்ல. அவரால் சாட்சியம் அளிக்க வரஇயலும். அவர் வந்து சாட்சியம் அளித்தால் தமான் முறையா இருக்கும் என்றால் சரியல்ல. எனக்கும் விபரங்கள் அனைத்தும் தெரியும். விபரங்கள் அனைத்தையும் வழக்கறிஞர்ருக்கு தெரிவித்து அறிவிப்பு அனுப்பியதிலிருந்து நான் தான் தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான்.

10. வழக்கறிஞர் அறிவிப்பில் நான் பொன்னமாவிற்காக அனுப்புவதாக வாசகம் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. எதிரி குடும் தேவைக்கா கடன் பெற்றதாக புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் கடனுறுதி சீட்டில் வியாபார தேவைக்கு என்று குறிப்பிடபட்டிருப்பதால் ம.சாஆ.1 கடனு சீட்டானது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிபட்டுள்ள அறிப்பு என்றால் சரியல்ல.

11. எதிரி 6 மாதங்களுக்காள பணத்தை திருப்பி கொடுப்பதாக குறிப்பிடபட்டிருப்பது கடனுறுதி சீட்டு மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி வாய் மொழியாக தான் கூறினார். சீட்டு போட்டவர்கள் பணம் எடுக்கும்பொழுது வவுச்சரில் மட்டும் பெற்றுக்கொள்வோம். பல்லடம் சிட்பன்டிற்காக இந்நீதிமன்றத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் வவுச்சர்கள் மற்றும் காசோலை வைத்து தாக்கல் செய்துள்ளோம். பொறுப்பிற்காக காசோலை மற்றும் கடனுறுதி சீட்டு பெறுவதில்லை.

12. எதிரிக்கு சிட்டி யூனியன் வங்கியின் வங்கி கணக்கு இருந்தது என்றால் சரிதான். அவ்வங்கி கணக்கானது 2013 ம் வருடம் அவ்வங்கி கணக்கானது Non Performing Account என்றாகிவிட்டது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே தான் சீட்டிற்காக வழங்கிய காசோலை மற்றும் கடனுறுதி சீட்டை இவ்வழக்கில் தவறாக பயன் படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

13. 13.12.2020 ம் தேதியன்று எதிரி 14.12.2020 ம் தேதியிட்டு காசோலை வழங்கிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. காசோலை கொடுக்கயிருப்பதாக வருமாறு கூறியதால் நான் சென்றேன். வரவு செலவு பொன்னமாளுக்கும் எதிரிக்கும் இடையே நடைபெற்றதாக கூறும் நிலையில் நான் எதற்காக சென்றேன் என்றால் பொன்னம்மாள் எங்களுடைய முதலாளியின் அம்மா பணம் கொடுக்க இருப்பதால் நான் சென்றேன்.

14. 13.12.2020 ஞாயிற்று கிழமை முழு ஊரடங்கு இருந்த நாள் என்றால் சரியல்ல. பொதுமக்கள் வெளியே நடமாடியிருக்க இயாலு என்றாலும் வரவு செலவு எதிரிக்கும் பல்லடம் சிட்ஸ்பன்சிற்கும் 2013 ல் நடைபெற்றது என்றால் சரியல்ல. அதனால் தான் பங்குதாரரான பொன்னம்மாளை வைத்து வரவு செலவு நடந்ததாக காண்பித்து அந்நிறுவனத்தின் ஊழியரான என் மூலமாக இவ்வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது

என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிறக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும பொன்னமாளை விசாரித்தால் தான் உண்மை தெரியும் என்றால் சரியல்ல.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2022.11.25 17:54:58 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**